## இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் - 2015

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அதிகாரம்) 39 (அ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதியத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் முதலீடுகள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எந்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையினாலும் ஏனைய வருமானமொன்றும் உழைக்கப்படாதிருந்தமையாலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வருமானச் செலவினக் கூற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 635,271 கூட்டுத்தொகையான 13 நடைமுறைச் சொத்துக்களின் மீதிகள் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 287,378 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 239,784 கூட்டுத்தொகையான 05 நடைமுறைப் பொறுப்பு விடயங்களின் மீதிகள் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 222,031 தொகையான செலுத்த வேண்டிய முற்பணத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எந்தச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | பட்டோலை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை, நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,271 | பட்டோலை, காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் ஏடுகள் |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 | பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் புத்தகங்கள் பதிவேடுகள் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குரிய நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களுக்காக கிடைத்த வட்டி வருமானம் நிதியத்தின் ஒரே வருமான மூலமாக இருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 10,456,639 தொகையான 02 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 3,435,797 தொகையான சேமிப்பு வைப்புக்களுக்கு கிடைக்கவேண்டிய வட்டி ரூபா 12,957 தொகை கலைத்தல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு கலைத்தல் கணக்கில் ரூபா 13,905,393 தொகையான வரவு மீதி மீளாய்வாண்டின் போது இறப்பர் கட்டுப்பாட்டு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் அந்தக் கணக்கின் மீதி அந்த அளவினால் குறைவடைந்திருந்தது. மேலும் நிதியத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள்

காணப்படாமையினால் மீளாய்வாண்டில் வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தும் அதற்காக அமைச்சரவைக் குறிப்பொன்று 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 17 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். நிதி அமைச்சின் அவதானிப்புக்களுக்கு இணங்க நிதியத்தின் நடவடிக்கைகளை கலைப்பதற்குத் தேவையான நியதிச்சட்ட வரைவு, சட்டவரைவு வழங்கல் தொடர்புபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் செயற்படு நிலைமையொன்று காணப்படாமையினால் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மற்றும் பெறவேண்டிய/ செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.